**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.78/2024**

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் செவ்வாய் கிழமை வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுதா ராம்குமார் | த/பெ.: | சுதாகர் |
| கிராமம்: | திருத்துறைப்பூண்டி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | வியாபாரம் |
| வயது: | 48 | முகவரி: | திருத்துறைப்பூண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.01.2026.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 14.07.2023–ல் எனக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமிசரி நோட் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 05.08.2024–ம் தேதி நான், எனது வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 07.08.2024–ல் நான் அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.3** ஆகும். எனது பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.